පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 95

ආයතනයේ නම :- අධ්‍යාපන,උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අග්‍රාමාත්‍ය අධ්‍යාපන,උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යතුමියගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்; 95

நிறுவனத்தின் பெயர்: கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
பாராளுமன்றத்தில் அரச கணக்குகள் தொடர்பாக செயற்குழுவினால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ பிரதமர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No 95

Name of the institution :- Ministry of Education, Higher Education and Vocational Education
Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

Nalaka Kaluwewe
Secretary
Ministry of Education, Higher Education and Vocational Education

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 95
நிறுவனத்தின் பெயர் - கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
(கல்வி அமைச்சு )

| தொடர் இல. | பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 95 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | நிறுவனம் குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக எடுத்த நடவடிக்கைகளுக்கு அமைய தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01 | <u>தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான பிரச்சினைகள்</u><br>பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தகவல்களை உள்ளடக்கிய முறையான கணினி மென்பொருளைத் தயாரிக்குமாறு 2016.02.12 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரச கணக்குகள் பற்றிய குழுவில் வழங்கப்பட்டிருந்த கட்டளையை இதுவரையில் உரியவாறு நடைமுறைப்படுத்தாமை<br>தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் தரவுகள் சரியாக இற்றைப்படுத்தப்படவில்லை<br>என்பதும், உண்மை ஆளணி பற்றிய உறுதியான தகவல்களை அதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. | அனைத்து ஆசிரியர்கள் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கியிருந்த தேசிய கல்வி முகாமைத்துவ ஆசிரியர் தகவல் முறைமையின் (NEMIS - THRM) தரவுகள் தற்போது மேலும் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் தற்போது இலங்கை விமானப் படையினால் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையொன்று (EMIS) தயாரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு தயாரிக்கப்பட்டு வருகின்ற கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையின் ஆசிரியர் ஆளணி மொடியுல் மூலமாக ஆசிரியர்கள் சம்பந்தமான இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையொன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருப்பதுடன், அதன் மூலம் தற்போதுள்ள முறைமையினை விட வினைத்திறனாக ஆளணித் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். |
| 02 | <u>அரசாங்கப் பாடசாலைகளில் உயர் தர மாணவர்களின் வரவு சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்</u><br>இவ் விடயம் தொடர்பில் ஒரு ஆய்வினை மேற்கொண்டு அதற்கான தீர்வுகளைக் காண வேண்டும் என்றும், அதற்காக முன்மொழிவுகள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை வழங்குமாறும் 2019.08.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரச கணக்குகள் பற்றிய குழுவில் கட்டளையொன்று வழங்கப்பட்ட போதிலும், தற்போது வரையிலும் அந்த நிலைமையில் முன்னேற்றம் காணப்படாமை | தேசிய கல்வி நிறுவகத்தின் ஆய்வு மற்றும் திட்டமிடல் பீடத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையினால் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கைப் பாடசாலைகளின் தரம் 13 மாணவர்களின் பாடசாலைக்கு வராமை எனும் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கமைய நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.<br>கல்வி அமைச்சின் 2006.12.06 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கமைய, க.பொ.த (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றுவதற்காகக் கல்வி பயிலும் ஒவ்வொரு பாடசாலை மாணவரும் பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில், பாடசாலை நடைபெற்ற நாட்களின் எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 80% வரவை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது<br>உயர் தர ஆசிரியர்களின் பாட அறிவை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான பாட அலகுகள் மற்றும் க.பொ.த (உயர் தர) பரீட்சையின் போது பெரும்பாலான மாணவர் குழுக்களால் சரியாகப் பதிலளிக்க முடியாத பாட அலகுகளை இனங்கண்டு, அந்த அலகுகளில் உள்ள பாட விடயங்கள் பற்றிய சரியான அறிவை மாணவர்களுக்கு வழங்குவதற்காக, உயர் தரப் பாடங்களைப் கற்பிக்கும் ஆசிரியர்களின் பாட அறிவை இற்றைப்படுத்தப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வள பங்களிப்புடன் உயர் தர ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அத்துடன், உயர் |

| | | |
|---|---|---|
| | | தரப் பாடங்களில் உள்ள பாட விடயங்கள் பற்றிய செயன்முறை அறிவை வழங்குவதற்காக ஆசிரியர் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன<br>க.பொ.த (உயர் தர) பரீட்சையில் செயன்முறைப் பரீட்சைகள், பல்வேறு பாடங்களுக்கு மட்டுமே நடாத்தப்படுவதால், பாடம் தொடர்பான அனுபவத்தைப் வழங்குதல் மற்றும் செயன்முறை அறிவைப் பெற்றுக் கொள்ளல் என்பன குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன.<br>எனவே, செயன்முறைப் பாட அறிவை மதிப்பிடக்கூடிய வகையில் தேசிய மதிப்பீட்டுச் செயல்முறையை மாற்றுவது பொருத்தமானது.<br><br>2026 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் மறுசீரமைப்புக்களுக்கமைய, தேசிய மட்ட மாணவர் மதிப்பீட்டுச் செயல்முறை மாற்றமடையும். உண்மை மற்றும் செயற்பாட்டு மைய கற்றல் கற்பித்தல் செயன்முறையூடாகப் பெற்றுக் கொண்ட அறிவு, தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் செயன்முறைச் செயற்பாடுகளூடாக மதிப்பீடு செய்யப்படும். அதற்கமைய தனிப்பட்ட வெளிவாரி நிறுவனங்களூடாக, விடயம் சார்ந்தன உள்ளடக்கப்படக்கூடிய வகையில் செயன்முறை விடயங்களைப் புரிந்து கொள்வதில் மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி மீதி ஈர்ப்பு ஏற்படும். |
| 03 | <u>மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக டெப்லெட் கணினிகள் வழங்குதல்</u><br><br>உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக டெப்லெட் கணினிகள் வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டில் 3.4 பில்லியன் செலவிடப்பட்டு 96,919 டெப்லெட் கணினிகள் மற்றும் 2,639 மின்னேற்ற அடுக்குத் தட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்தக் கணினிகளில் 93,027 டெப்லெட் கணினிகள்) நோக்கத்திலிருந்து விலகி தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மீதமுள்ள 3,892 டெப்லெட் கணினிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கணினிகளை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட கல்வி முறைமையோ அல்லது திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமோ (மொடியுல்) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br>தற்போது வழங்கப்பட்ட டெப்லெட் கணினிகளுள் அதிகளவானவை செயலிழந்தோ அல்லது பாவனையற்றோ காணப்படுவதுடன் சில டெப்லெட் கணினிகள் காணாமல் போயுள்ளன. | 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் கணினிகள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புப் பணிகளுக்காக வருடாந்தம் ரூ. 120 மில்லியன் வீதம் 126-2-3-22-1302 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, அந்தப் பணம் பாடசாலைகளின் கணினிக் கூடங்களில் உள்ள கணினிகள் மற்றும் டெப்லெட் இயந்திரங்களின் பராமரிப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும். ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து ரூபா 25 மில்லியன் நிதி ஒதுக்கீடுகள் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள ரூபா 95 மில்லியன் கல்வி அமைச்சினால் பராமரிப்புப் பணிகளுக்காகத் தேவைப்படும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், அமைச்சு மூலம் நேரடியாக நடாத்தப்படும் பராமரிப்பு செயலமர்வுகளுக்கான செலவுகளை மேற்கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படும். அதற்கமைய, பாடசாலைகள் மற்றும் மாகாண வலயக் கல்வித் திணைக்களங்கள் ஊடாகக் கிடைக்கப் பெற்றுள்ள கோரிக்கைகளுக்கு அமைய டெப்லெட் இயந்திரங்களின் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பராமரிப்பினைச் செய்வதற்குத் தேவையான உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.<br>.<br>பாடசாலைகளின் இணையக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டில் ரூ. 30 மில்லியன் நிதி ஒதுக்கீடுகளும், 2025 ஆம் ஆண்டில் ரூ. 150 மில்லியன் நிதி ஒதுக்கீடுகளும் 126-2-3-2-1402 எனும் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் அதிகபட்சமாக ரூ. 5,000/- இப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் என்பதுடன் இப் பாடசாலைகளுக்குரிய மாதாந்த இணையக் கட்டணத்தின் அளவை பாடசாலை கல்வி அமைச்சிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் அதற்குத் தேவையான |

நிதி ஒதுக்கீடுகள் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாகப் பாடசாலைகளுக்கு வழங்கப்படும்.

டெப்லெட் கணிணிகளை விளைதிறன் மிக்க வகையில் பயன்படுத்துவதை கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக அனைத்து மாகாணங்கள் மற்றும் வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவிப் பணிப்பாளர்களை அறிவுறுத்துதல். டெப்லெட் இயந்திரங்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக 2023.10.11 ஆம் திகதியிடப்பட்டு பாடசாலைகளுக்குத் தரவுப் பத்திரமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01). மேலும் இந்த இயந்திரங்கள் தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாகச் செயற்பட்ட விதம் தொடர்பாகப் பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு தேவையான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன. டெப்லெட்களை வழங்கும் செயற்திட்டத்திற்குரிய பாடசாலைகளைத் தொடர்ச்சியான மேற்பார்வைக்கு உட்படுத்துவது தொடர்பான ஒரு பொறிமுறையை மாகாணக் கல்வித் திணைக்களம் ஊடாகத் தயாரித்துக் கொள்ளுமாறு 2024.01.23 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் பயன்படுத்தப்படுவதற்காக மேற்பார்வைப் பத்திரமொன்றும் இந்தக் கிளையினால் தயாரித்து வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

மாகாண மற்றும் வலய தகவல் தொழில்நுட்ப விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின்போதும் இந்த கண்காணிப்புப் பணிகள் பற்றி கலந்துரையாடப்படுகிறது.

எதிர்கால செயற்திட்டங்களின்போது டெப்லட் இயந்திரங்களை மாத்திரம் வழங்குவதற்குப் பதிலாக திறன் பலகை (SMART BOARD), டெப்லெட் இயந்திரங்கள் / மடிக்கணினிகள், Iota மற்றும் AI தொகுதிகள் (Kits) போன்றவற்றை வழங்கி, புதிய தொழில்நுட்பம் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதுடன், குறைந்தபட்சம் ஒரு மாவட்டத்திற்கு ஒரு பாடசாலைக்கு வழங்கி எதிர்காலத்தில் அதனை விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இது தொடர்பான செயற்திட்ட முன்மொழிவுகள் யோசனைகள் நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் இந்தக் கிளைக்கு இதுவரை ஒதுக்கப்படவில்லை. இருப்பினும், தற்போதுள்ள உபகரணங்களைப் விளைதிறனுள்ள வகையில் பயன்படுத்தி புதிய அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வி முறைமையினை டிஜிட்டல்மயமாக்குதல் செயற்திட்டத்தின் கீழ் திறன் பலகைகள் மற்றும் கணினி தொடர்பான உபகரணங்களை வழங்கும் வேலைத்திட்டங்கள் இடம்பெறுகின்றன. வெளிநாட்டு உதவித் செயற்திட்டங்களின் கீழ் மற்றும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் கீழ் இவ்வாறான பல செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 04 | <u>தேசிய கல்விக் கொள்கை ஒன்றைத் தயாரித்தல்.</u><br><br>2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி இராஜாங்க அமைச்சு மூலம் செலவிடப்பட்ட ரூ. 5,219,297,390/- பெறுமதியான மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளின் கட்டமைப்பு தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு 2023.04.10 ஆம் திகதியிடப்பட்ட 2022 இன் இல. 18 இற்கமைவான கணக்காய்வு வினவல் மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும், அதற்கு கல்வி அமைச்சு இதுவரை பதிலளிக்கவில்லை.<br><br>தேசிய கல்விக்கொள்கை ஒன்றைத் தயாரிக்கும் செயன்முறையின் தற்போதைய நிலைமை தொடர்பில் குழுவினால் வினவப்பட்டது.<br>. | <u>தேசியக் கல்விக்கொள்கையொன்றைத் தயாரிக்கும் செயன்முறையின் தற்போதைய நிலைமை</u><br><br>நிபுணர் குழுவொன்றின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட புதிய தேசிய கல்விக்கொள்கை கட்டமைப்பிற்காக 2023.10.30 ஆம் திகதியிடப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள 31 நிலை மாற்றங்களை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்கு கல்வி தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கமைய, 03 துறைகளின் கீழ் உள்ள அந்த நிலை மாற்றங்களை முன் பிள்ளைப் பருவக் கல்வி, பொதுக் கல்வி, தொழிற் கல்வி மற்றும் உயர் கல்வி ஆகிய நான்கு துறைகளுடனும் இணைக்கும் வகையில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான வரைபடத்தைத் (Road Map) தயாரித்தல் உள்ளிட்ட பணிகளுக்காகக் கல்வித் துறையின் நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பல சந்தர்ப்பங்களில் பல சுற்று கலந்துரையாடல்கள்/ செயலமர்வுகளை நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அவதானிப்புகள், செயற்பாடுகள், விளைவுகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஆவணங்களும் விரிவாகத் தயாரிக்கப்பட்டு, எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான அடிப்படைப் பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது.<br>தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கைகளுக்கு இணங்கவும், நவீன உலகிற்குப் பொருத்தமான கல்வி முறையொன்றை இலங்கையில் ஸ்தாபிக்கவும், தற்போது தயாரிக்கப்பட்டுள்ள தேசியக் கல்விக்கொள்கை கட்டமைப்பை மிகவும் பயனுள்ள மற்றும் வினைத்திறனான முறையில் அபிவிருத்தி செய்து, நவீன இலங்கைக்குப் பொருத்தமான தேசியக் கல்விக்கொள்கையொன்று வகுக்கப்பட்டு வருகின்றது. |
| 05 | <u>பாடசாலைகளுக்குச் சொந்தமான காணிகளை வெளித் தரப்பினர் அத்துமீறி அனுபவித்தல்</u><br><br>அரசாங்கக் கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனைக்கு அமைய, 09 தேசியப் பாடசாலைகள் மற்றும் ஏனைய 22 பாடசாலைகளுக்குச் சொந்தமான பாரியளவிலான காணிகள் வெளியாட்களினால் அத்துமீறி அனுபவிக்கப்படுகின்றன | • **பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி** - எம்மிடம் ஒரு கோவை இருந்தபோதிலும் அதில் அனுமதியின்று குடியேறி உள்ளவர்கள் சம்பந்தமாக இதுவரையில் அறிக்கை செய்யப்படவில்லை<br><br>• **ஸ்ரீ சுமங்கல மகளிர் மகா வித்தியாலயம்** - 2019.07.22 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்ட பிஸ்கல் கட்டளைகள் மூலம் அத்துமீறி குடியேறி உள்ளவர்களை அகற்றியதன் பின்னர் காணியின் தெளிவான உரித்து 2019.08.28 ஆம் திகதி அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.<br><br>• **ஸ்ரீ ராகுல மத்திய வித்தியாலயம், கடுகஸ்தோட்ட** - தற்போது அத்துமீறி குடியிருக்கும் எம்.ஜே மெண்டிஸ் என்பவர் சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக எம்.ஜே மெண்டிஸ் அவர்களால் கௌரவ உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன், அந்த நீதிமன்ற நடவடிக்கைக்கு இறுதித் தீர்ப்பு கிடைக்கவில்லை |

| | | |
|---|---|---|
| | | • **கம்பளை ஸாஹிரா கல்லூரி** - கம்பளை ஸாஹிரா கல்லூரியினால் அனுபவிக்கப்படும் காணிப் பகுதிகளைச் சரியாக அடையாளம் காண்பதற்காக வரைபடம் (Plan) வரையப்பட்டுத் தயாரிக்கப்பட்ட ஒரு ஆவணத்தைப் பெற்றுக்கொள்வதாக காணி அமைச்சின் மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்கமைய, அடுத்த வருட வருடாந்த அளவீட்டு வேலைத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் அல்லது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதி ஒதுக்கீடுகளிலிருந்து உரிய அளவீட்டுக் கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் மேற்படி அளவீட்டுப் பணியை மேற்கொள்ளுமாறு அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தப் பணி நிறைவடைந்த பின்னர் களப் பரிசோதனையொன்றை மேற்கொண்டு அத்துமீறு குடியேறியுள்ளவர்கள் சம்பந்தமாக முடிவொன்றை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>• **தவளம வித்தியாராஜ தேசியப் பாடசாலை, காலி** - இந்த காணி இன்னும் முறையாக கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்படவில்லை என்பதுடன், தற்போது அத்துமீறி குடியிருக்கும் நபர் அனுபவிக்கும் காணிப் பகுதியை நியதிப்படுத்த இணக்கம் தெரிவிக்க முடியாது என அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• **கிறிஸ்துதேவ ஆண்கள் கல்லூரி, காலி** - பிரதேச செயலாளர் தலையிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளதாகவும், தற்போது அத்துமீறி குடியேறி உள்ளவர்களது பிரச்சினை எதுவும் இல்லை எனவும் அதிபரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• **கிறிஸ்துதேவ மகளிர் வித்தியாலயம், காலி** - இந்த வித்தியாலயத்தில் காணப்பட்ட காணிப் பிரச்சினைகள் சம்பந்தமாக 2023.01.10 ஆம் திகதி களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பரிந்துரைகளுக்கு அமைய பிரச்சினைக்குரிய காணிப் பகுதியை உரித்திழக்காமல் அரசாங்கத்திற்காக சுவீகரித்துக் கொள்வதற்குரிய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன |
| | | • **பண்டாரவளை விசாகா மகளிர் மத்திய மகா வித்தியாலயம்** - இதற்கு சில வருடங்களுக்கு முன்னர் சுவீகரிப்பதற்கு முன்மொழியப்பட்ட காணியின் எல்லையில் அத்துமீறி குடியேறியவர்களது சில கட்டுமானங்கள் காணப்பட்டபோதிலும், தற்போது அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டதாகவும், இந்த காணியை சுவீகரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், கல்வி அமைச்சிடம் ஒப்படைப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• **கேகாலை மத்திய வித்தியாலயம்** - அத்துமீறி குடியேறியுள்ளவர்களை அடையாளம் காண்பதற்காக அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலையின் உத்தியோகபூர்வ விடுதிகளில் பலவந்தமாகத் தங்கியிருந்த அதிகாரிகள் 2020 ஆம் |

ஆண்டில் அகற்றப்பட்டுள்ளனர்.

- **கம்/ புனித மேரி வித்தியாலயம், நாவலப்பிட்டி** - மோகன் ராசய்யா எனும் அனுமதியின்றி குடியிருக்கும் ஒருவர் தொடர்ந்தும் பாடசாலைக் காணியை அனுபவித்துக் கொண்டிருந்தார். அவரை அகற்ற வேண்டாம் என 2022.01.01 ஆம் திகதியிடப்பட்ட 'ஒரு நாடு ஒரு சட்டம்' தொடர்பான ஜனாதிபதி செயலணியின் செயலாளரினால் கல்விச் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

- **கொ/ பிங்வத்த உபனந்த வித்தியாலயம்** - கொ/ பிங்வத்த உபனந்த வித்தியாலயத்தின் காணி மற்றும் கட்டடங்களை பலவந்தமாக அனுபவிக்கும் நபர்களை அகற்றி, பிலியந்தலை கல்வி வலயத்தின் தெஹிவளை எஸ். டி. எஸ். ஜயசிங்க வித்தியாலயத்துடன் இணைத்து எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் உயர் நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்காக சட்டமா அதிபரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

- **கொ/ கெத்திரிடல் (ஆண்கள்) வித்தியாலயம்** - கொ/ கெத்திரிடல் (ஆண்கள்) வித்தியாலயம் மற்றும் புனித ஜேம்ஸ் தேவாலயம் ஆகியவற்றுக்கு இடையேயான எல்லைகளைத் தீர்த்து வைப்பதற்காகத் தேவையான அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மேல் மாகாணக் கல்விச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துமீறி குடியேறி உள்ளவர்கள் தொடர்பில் அறிக்கை கிடைக்கப்பேறவில்லை.

- **பண்டாரவளை மத்திய மகா வித்தியாலயம்** - இந்தப் பாடசாலையின் விளையாட்டு மைதானத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணியில் அத்துமீறிய ஒருவர் குடியிருந்தார், அந்தக் குடியிருப்பாளரை காணியிலிருந்து அகற்றுவதற்காக 20 பேர்ச்சஸ் வழங்கப்பட்டுள்ளதுடன், 2024.10.16 ஆம் திகதி பாடசாலையின் அதிபர் திருமதி விசாகா ராஜபக்ஷவுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலின்போது அந்த அத்துமீறியவர் பாடசாலை சுவீகரித்துக் கொண்ட காணியிலிருந்து முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

- **கஹகொல்ல மத்திய மகா வித்தியாலயம்** - ப/ கஹகொல்ல மத்திய மகா வித்தியாலயக் காணிக்குரிய காணிப் பகுதிகள் 03 உள்ளன. கஹகொல்ல வித்தியாலயக் காணி - 03 ஏக்கர் 02 றூட் 01 பேர்ச், வெளிபிஸ்ஸ எனும் வெளிபிஸ்ஸ பத்தனை காணி - 01 ஏக்கர் 02 றூட் 11 பேர்ச், பிங்கேதென்ன / தியகிரில்ல உல்பத்த காணி - 03 ஏக்கர் 02 றூட் 27 பேர்ச் ஆகும். வெளிபஸ்ஸ எனும் வெளிபிஸ்ஸ பத்தனை காணிப் பகுதி பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருப்பது அத்துமீறி குடியேறியுள்ளவர்கள் அக் காணியில் இருக்கும்போதேயாகும். அத்துடன் அந்தக் காணிப் பகுதி பாடசாலையினால் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், அந்தக் காணிப் பகுதி பாடசாலையின்

தேவைக்கும் அவசியமில்லை. பிங்கேதென்ன/ தியகிரில்ல உல்பத்த காணி, இது திட்ட இலக்கம் *1510* ஆகும். இந்தக் காணிப் பகுதியில் பாடசாலையின் விளையாட்டு மைதானமும் இரண்டு ஆசிரியர் விடுதிகளும் உள்ளன. இந்தக் காணியிலிருந்து அத்துமீறி குடியேறி உள்ளவர்களை அகற்றுவது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இணைந்து நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **டீ.எஸ். சேனாநாயக்க மத்திய மகா வித்தியாலயம்** - இதற்கு முன்னர் மூன்று பேர் அத்துமீறி குடியேறி இருந்தனர், தற்போது அந்த அத்துமீறி குடியிருந்தவர்கள் அனைவரும் அகற்றப்பட்டுள்ளனர்

- **காமினி மத்திய மகா வித்தியாலயம் - பெந்தோட்ட** - இந்த காணியில் அத்துமீறி குடியிருப்பவர்கள் எவரும் இல்லை, ஆனால் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள வீடுகளுக்குச் செல்வதற்காகப் பாடசாலை விளையாட்டு மைதானம் ஊடாகப் பாதையொன்று அத்துமீறிப் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பாதையைச் சட்டரீதியாக வழங்க முடியாது எனப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானிக்கப்பட்டு அது எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- **மஹிந்த வித்தியாலயம் - காலி** - அத்துமீறி குடியேறி உள்ளவர்களை அடையாளம் காண்பதற்காக 2024.02.20 ஆம் திகதி நில அளவைத் திணைக்களம் மூலம் அளவீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துமீறி குடியேறி இருப்பவர்களைத் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள போதிலும், மேலும் எட்டு பேர் அத்துமீறி குடியேறி உள்ளதுடன் அவர்கள் தொடர்ந்தும் உள்ளனர் என காலி பிரதேச செயலாளர் தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

- **கரன்தெனிய மத்திய மகா வித்தியாலயம்** - தற்போது அத்துமீறி குடியேறி உள்ளவர்கள் நியதிப்படுத்தப்பட்டுப் பாடசாலைக் காணிப் பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளது.

- **தங்கேதர ஜயவர்தன வித்தியாலயம் - காலி** - 38(அ) இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியில் இரண்டு ஆரம்பத்தில் குடியேறி இருந்தவர்கள் அத்துமீறி குடியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக காலிப் பிரதேச செயலாளர் 2020.07.15 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளார். அவர்கள் அனுபவிக்கும் காணிப் பகுதிகளை மீண்டும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. அது தவிர மற்றுமொரு ஆரம்பத்தில் குடியிருந்தவர் வீடொன்றை அமைப்பதற்கு காணிப் பகுதியைக் கோரியுள்ளார். இந்த அத்துமீறி குடியேறி உள்ளவர்களை அகற்றுவதற்குப் பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

- **கித்துலம்பிட்டிய ஆனந்த மகா வித்தியாலயம் - காலி**- 2019.08.07 ஆம் திகதி பாடசாலைக்காக சுவீகரிக்கப்பட்ட காணியில், வேறு தரப்பினரால் அனுபவிக்கப்படும் காணிப் பகுதிகளில் தகவல் தொடர்பாடல் மத்திய

நிலையத்திற்குத் தேவையான 31 பேர்ச்சஸ் தவிர்ந்த ஏனைய காணிப் பகுதிகள் பாடசாலைக்குத் தேவை என தென் மாகாணக் கல்விச் செயலாளர் 2018.08.08 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளார்.

- **பொ/ மின்னேரிய தேசியப் பாடசாலை** - "ஹிங்குரக்தமன" எனும் முழுமையான காணிப் பகுதியையும் முறையாக ஒப்படைக்குமாறு 2022.03.23 ஆம் திகதியிடப்பட்டு ஹிங்குரக்கொட பிரதேச செயலாளரிடம் கோரிக்கைக் கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (அத்துமீறி குடியேறி உள்ள ஒருவரால் வேலி எல்லை அமைக்கப்பட்டிருந்ததால்) அத்துமீறு உள்ளவர்களால் உரிமை கோரப்பட்ட காணிப் பகுதிக்குரிய முறையான ஆவணங்கள் அவர்களிடம் இல்லாததால், காணியை கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைப்பது பொருத்தமானது என அறிவிக்கப்பட்டுள்ளது.

- **கு/ யூ.பி. வன்னிநாயக்க மத்திய மகா வித்தியாலயம்** - பாடசாலைக் காணியில் அத்துமீறி குடியிருப்பவர்களை அகற்றுவதற்காக சலுகைகளைப் பெறுவதற்கான சட்டத்தின் கீழ் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் மேலும் அத்துமீறி குடியிருப்பவர்கள் அகற்றப்பட்டுள்ளனர்.

- **எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க வித்தியாலயம், குண்டசாலை** - பாடசாலைக் காணியில் அனுமதியின்றி பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தற்போது பாடசாலையின் வேலி எல்லைகள் சரியாக அமைக்கப்பட்டு, அந்த அனுமதியின்று மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

- **கண்டி/ ஸ்ரீ சுவர்ணஜோதி தேசிய பாடசாலை** - கிரிமத்கும்புர ஸ்ரீ சுவர்ணஜோதி தேசிய பாடசாலை வளாகத்தில் உள்ள தேக்கு, மஹோகனி மரங்களை அண்மையில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்கள், பாடசாலையின் வேலி எல்லைகளைத் தனது காணிக்குள் வருமாறு மாற்றியுள்ளதாகவும், பாடசாலைக்குச் சொந்தமான காணியில் அனுமதியின்றி வேலி ஒன்றை அமைத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. அது தொடர்பில் தற்போதைய நிலைமை குறித்த அறிக்கையொன்றை அனுப்புமாறு பிலிமத்தலாவை பிரதேச செயலாளரிடம் தகவல் கோரப்பட்டுள்ளது.

- **அக்குரண அஸ்ஹர் தேசியப் பாடசாலை** - பாடசாலை எல்லையை அண்மித்த ஒரு தனிநபரால் தனது வீட்டிற்குச் செல்வதற்காக அத்துமீறி பாடசாலைக் காணியின் சுமார் 10 அடி அளவைப் பயன்படுத்துவது இடம்பெறுகிறது. இது சம்பந்தமான அறிக்கையொன்று மத்திய மாகாணக் கல்விச் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது.

- **க/கலகெதர மத்திய மகா வித்தியாலயம்** - இந்தக் கல்லூரிக்குரித்தான காணிப் பகுதியுடன் இணையும் வகையில், அந்தக் கல்லூரிக்கு எல்லையாகப் பாயும் ஆற்றில் மணல் அள்ளுவதற்காகப் பாடசாலைக் காணி

| | | |
|---|---|---|
| | | ஊடாக வீதி ஒன்றை அமைத்துக்கொள்வது சம்பந்தமாக கலகெதர பிரதேச செயலாளரிடம் 2017.12.29 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தகவல் கோரப்பட்டுள்ளது.<br><br>• **அநுருத்த குமார தேசியப் பாடசாலை -** நாவலப்பிட்டி பாடசாலையின் மு.பி. பிரதான 326 திட்ட வரைபடத்தில் உள்ள 03 ஆம் இலக்கக் காணித் துண்டை தற்போது ஸ்ரீ வேளுவனாராம விகாரை அனுபவித்து வருவதாகப் பிரதேச அளவையாளரால் அறிக்கையிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• இர/காமரங்காபிட்டிய ஸ்ரீ ஞானானந்த வித்தியாலயம் - காணி சுவீகரிக்கப்பட்டபோது தவறான அளவீடு காரணமாக தனியார் தரப்பினருக்குச் சொந்தமான இரண்டு காணித் துண்டுகளும் பாடசாலைக் காணியுடன் சுவீகரிக்கப்பட்டுள்ளன. 4668 ஆம் இலக்கப் பாடசாலை வளாகத்தின் அளவீட்டுத் திட்டத்தில் உள்ள C மற்றும் D பகுதிகளில் அத்துமீறி அனுபவிக்கும் உரிமையாளர்களை அகற்றுவதற்கு அரச காணி உடைமையை மீளப்பெறும் சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் பிரதேச செயலாளருக்கே இருப்பதால், சம்பந்தப்பட்ட அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பெல்மடுல்ல பிரதேச செயலாளருக்கு 2017.02.16 ஆம் திகதியிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• **க/மதீனா தேசியப் பாடசாலை -** இந்தப் பாடசாலையின் காணியை அளந்து சீராக்குவதற்காக, அப் பாடசாலைக் காணி சம்பந்தமாக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்த L67/04 இலக்க வழக்கின் நிலைமை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு 2021.02.22 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது..<br><br>• **கம்/அல்-முபாரக் மத்திய மகா வித்தியாலயம் -** பாடசாலையின் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தின் காணிப் பகுதியில் அத்துமீறிய குடியிருப்பாளர் ஒருவர் கட்டடம் (வீடு) |
| | | ஒன்றைக் கட்டிக்கொண்டிருக்கிறார். இது தொடர்பாக பாடசாலை அதிபர், பியகம பிரதேச சபை மற்றும் கல்வி அமைச்சினால் பியகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டு, அந்த அத்துமீறிய நபரையும் அத்துமீறிய கட்டுமானத்தையும் பாடசாலை வளாகத்தில் இருந்து அகற்றும்படி கோரப்பட்டுள்ளது. ஆயினும், தற்போதைய நிலைமையின்படி, அந்த அத்துமீறிய கட்டுமானம் பாடசாலை வளாகத்தில் இருந்து அகற்றப்படவில்லை.<br><br>• **பண்டாரநாயக்க மத்திய மகா வித்தியாலயம், வேயங்கொட**<br>தற்போது அத்துமீறிய குடியிருப்பவர்கள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன |

| | | |
|---|---|---|
| 06 | <u>பிரான்ஸின் பாரிஸ் நகரில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக் காரியாலயத்தில் சேவையாற்றிய பெண் உத்தியோகத்தர் ஒருவரின் பதவி ரத்து செய்யப்பட்டமைக்காக நட்டஈடு வழங்குதல்.</u><br><br>அப/08/1742/316/087 மற்றும் 2006.10.04 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை அனுமதியின் அடிப்படையில், பிரான்ஸின் பாரிஸ் நகரில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர வதிவிடப் பிரதிநிதிக் காரியாலயத்திற்கு அலுவலக உதவியாளர் பதவிக்காக நியமிக்கப்பட்டு, பின்னர் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் பதவி வரை பதவி உயர்வு பெற்றிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை சம்பளம் வழங்குவதற்காகக் கல்வி அமைச்சினால் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குச் நிதி செலுத்தப்பட்டிருப்பதாலும், அந்தப் பெண் உத்தியோகத்தரின் பதவி ஒரு மாதகால முன்னறிவித்தலின்றி ரத்து செய்யப்பட்டதாலும் சம்பந்தப்பட்ட பெண் உத்தியோகத்தருக்கு நட்டஈடு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | இணைப்பு *01* |
| 07 | <u>ஒழுக்காற்றுப் பிரச்சினைகளைத் தீர்த்து முடித்தல்</u><br><br>தீர்க்கப்படாத அதிக எண்ணிக்கையிலான ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் காணப்படுவதும், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஒழுக்காற்றுப் பிரச்சினைகள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இருத்தல். | இந்த அமைச்சுக்குரிய நிறுவனங்களின் ஒழுக்காற்றுப் பிரச்சினைகளைத் தாமதமின்றித் தீர்த்து முடிப்பதற்காகப் பொருத்தமான ஒரு பொறிமுறையைத் தயாரிக்க வேண்டும்.<br><br>i கல்வி அமைச்சின் ஒழுக்காற்று மற்றும் விசாரணைப் பிரிவு 2023.09.04 ஆம் திகதி வரை மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) இன் கீழ் இயங்கி வந்தது. மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) இன் கீழ் பல பிரிவுகள் இருந்தமையால் ஏற்பட்ட அதிகளவான கடமைகள் காரணமாக, ஒழுக்காற்று மற்றும் விசாரணைப் பிரிவின் அவசரக் கோவை கநடவடிக்கைகளில் தாமதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாக, மேலதிகச் செயலாளர் (ஒழுக்காற்று மற்றும் விசாரணை) எனும் புதிய பதவி 2023.09.04 ஆம் திகதி முதல் உருவாக்கப்பட்டு, ஒழுக்காற்று மற்றும் விசாரணைப் பிரிவு அந்த மேலதிகச் செயலாளரின் கீழ் கொண்டுவரப்பட்டது<br><br>ii. கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களால் ஒழுக்காற்றுப் பிரிவில் இருந்த 05 விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களை பதிலாளர் இன்றி பிரிவின் சேவையில் இருந்து விடுவிக்க நேர்ந்தமையாலும், உதவிச் செயலாளர் (ஒழுக்காற்று) பதவி குறிப்பிடத்தக்க காலமாகக் வெற்றிடமாக இருந்தமையாலும் பிரிவின் கடமைகள் பெருமளவில் தாமதாகின. தற்போது, அந்தக் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, தாமதமான |

| | | |
|---|---|---|
| | | கடமைகளை விரைவாக நிறைவு செய்து வருகின்றனர்<br><br>iii. ஒழுக்காற்று மற்றும் விசாரணைப் பிரிவுக்கு ஒதுக்கப்படும் அதிகளவான கடமைகளை முகாமைத்துவம் செய்வதற்குத் தற்போதுள்ள பணிக்குழுவினர் போதுமானதாக இல்லாததால், மேலதிக பணிக்குழுவினர் தேவைப்பாடு குறித்து அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்காலத்தில் ஒழுக்காற்று மற்றும் விசாரணைப் பிரிவுகளுக்கு அத்தியாவசியமான பதவிநிலை உத்தியோகத்தர்களும் மற்றைய உத்தியோகத்தர்களும் போதுமானளவு நியமிக்கப்படுவர்<br><br>iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கு அமைவாக வெளியிடப்பட்ட 2019.07.13 ஆம் திகதியிடப்பட்ட 2131/60 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, அந்தந்த மாகாணங்களில் உள்ள தேசிய பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவையின் ஆசிரியர்களின் ஒழுக்காற்று அதிகாரம் அந்தந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர்களது பெயருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, இதுவரை 05 மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆசிரியர் ஒழுக்காற்று அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் ஒழுக்காற்று அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆரம்ப விசாரணைகளின் அளவு சிறிதளவேனும் குறைக்கப்பட முடியும்.<br><br>v. ஒழுக்காற்று மற்றும் விசாரணைப் பிரிவின் விடயக் கோவைகள் அடங்கியுள்ள அனைத்துத் தகவல்களையும் கணினிமயமாக்கி, உத்தியோகபூர்வ கடமைகளை ஒழுங்குபடுத்துவதற்காக ஒரு கணினித் தரவு முறைமையை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் தரவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் இலங்கை விமானப்படையின் தொழில்நுட்பப் பிரிவு ஆகியவை இணைந்து சம்பந்தப்பட்ட தரவு முறைமையை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளன |
| | | vi. நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கோவைகளின் பணிகளில் ஏற்படும் தாமதம் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தால் நிகழும் ஒன்றாகும். இவ்வாறான வழக்குகளில் பெரும்பாலானவை சிறுவர் துஷ்பிரயோகம் அல்லது குற்றவியல் நடவடிக்கைகள் தொடர்பான வழக்குகளாக இருப்பதால், இறுதி நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் நிறைவடைவதற்கு குறிப்பிடத்தக்க காலம் எடுக்கும். எனவே, வழக்கின் இறுதித் தீர்ப்பு கிடைக்கும் வரை, ஒழுக்காற்று கோவையின் மேலதிக நடவடிக்கைகளும் அதே காலப்பகுதியில் தாமதமாகும்.<br><br>ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான இறுதி வழக்கு அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் (செயற்பாட்டுக் குறிப்புகள்) சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தின் |

| | | |
|---|---|---|
| | | ஊடாகப் பெற்றுக்கொள்வதைத் துரிதப்படுத்துவதற்காக, அமைச்சின் அல்லது சம்பந்தப்பட்ட வலயக் கல்வி அலுவலகங்களின் உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, சில நேரங்களில் அந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அவ்வப்போது நீதிமன்ற அறிக்கைகளைக் கோராமல், வழக்கு நிறைவடையும் வரை வழக்கின் தற்போதைய நிலை குறித்து அவ்வப்போது சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் விசாரிப்பதும், வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் நீதிமன்றத்திடம் இருந்து அந்த வழக்குத் தீர்ப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதும் மேற்கொள்ளப்படுகிறது<br><br>vii. கல்வி அமைச்சின் ஊடாக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஒழுக்காற்று அதிகாரி கல்விச் செயலாளர் அல்ல என்பதுடன், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அல்லது இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகம் ஒழுக்காற்று அதிகாரியாக உள்ள சந்தர்ப்பங்களில், ஆரம்ப விசாரணை அறிக்கைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிற ஆவணங்கள் உரிய ஒழுக்காற்று அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, ஒழுக்காற்று அதிகாரியின் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க நேரிடுகிறது. அத்துடன், ஒழுக்காற்று உத்தரவுகளை சம்பந்தப்பட்ட ஒழுக்காற்று அதிகாரியே வெளியிடுவதால், அத்தகைய ஒழுக்காற்றுக் கோப்புகளின் நடவடிக்கைகள் குறித்து செயலாளரால் செல்வாக்குச் செலுத்த முடியாது. |
| 08 | <u>64 தேசிய பாடசாலைகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிக்கப்படாமை</u><br><br>64 தேசியப் பாடசாலைகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I இன் உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிக்கப்படாமல் இருத்தல் | **<u>64 தேசிய பாடசாலைகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் I ஆம் தர உத்தியோகத்தர்கள் அதிபர்களாக நியமிக்கப்படாமல் இருத்தல்</u>**<br>1928/28 ஆம் இலக்க மற்றும் 2015.08.21 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் '5' ஆம் பின்னிணைப்பிற்கு அமைய, தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவிக்காக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் 03 உறுப்பினர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சை சபையினால் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கமைய, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். (அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் புள்ளி வழங்கல் திட்டத்திற்கமைய இந்தப் பரிந்துரைகள் வழங்கப்படும்)<br><br>2025.10.31 ஆம் திகதி நிலவரப்படி வெற்றிடமாகவுள்ள, இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் I உத்தியோகத்தர் அதிபர் பதவியை வகிக்க வேண்டிய 47 தேசியப் பாடசாலைகளின் அதிபர் பதவிகளை நிரப்புவது தொடர்பாக எதிர்காலத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய அமைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர்.<br><br>மேலும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் |

| | | |
|---|---|---|
| | | அனுமதியுடன் கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம்: 32/2022 மற்றும் 2022.09.07 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட இடமாற்ற நடைமுறையின் 2.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நேர்முகப் பரீட்சைச் சபையின் பரிந்துரையுடன் நியமிக்கப்படும் அதிபர் பதவிக்குரிய இடமாற்றங்கள் அந்தப் பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடையே மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதையும், மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதனாலோ அல்லது வேறு காரணங்களினாலோ அந்தப் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு இடமாற்ற நடைமுறைகளின் படி இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது என்பதையும், சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்பதையும் குறிப்பிடுகிறேன். |
| 09 | <u>விசேட கல்விச் சேவையின் ஆசிரியர் நியமனங்கள்</u><br>விசேட கல்வித் துறையில் ஆசிரியர் நியமனம் பெற்ற 207 ஆசிரியர்கள், அத்துறையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாமல், சாதாரண கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையொன்றின் போது கண்டறியப்பட்டதாகக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது | விசேட கல்விப் பாடத்திற்காக ஆசிரியர் நியமனம் பெற்று, தற்போது வேறு பாடங்களைக் கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காகக் கற்பிப்பதில் ஈடுபட வேண்டும் என கல்வி அமைச்சின் 42/2012 ஆம் இலக்க சுற்றுநிருபமும், ED/9/18/8/2/6 ஆம் இலக்க கல்விச் செயலாளரின் கட்டளைக் கடிதமும் வெளியிடப்பட்டுள்ளன. கல்வி அமைச்சின் 37/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 12.0 முதல் 12.4 வரையிலான அத்தியாயங்களில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, அவ்வாறு சேவையில் ஈடுபடாத ஆசிரியர்களுக்கு அறிவித்தபின், அவர்களது சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தம் செய்யப்படல் வேண்டும்<br><br>விசேட கல்விச் சேவையில் ஈடுபடாத ஆசிரியர்கள் குறித்து ஆராய்ந்து, அவர்களைச் சம்பந்தப்பட்ட பாடத்தைக் கற்பிப்பதில் ஈடுபடுத்துவதற்கு உதவி கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள் மற்றும் உரிய கல்வி உத்தியோகத்தர்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளனர். தேசியப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் குறித்து இந்த அமைச்சின் ஊடாகவும், மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் குறித்து வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாகவும் சேவையில் ஈடுபடுத்தும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| 10 | <u>**விளையாட்டுப் பாடசாலைகள் முறையாக இயங்காமலிருத்தல்**</u><br><br>விளையாட்டுத் திறமைகள் கொண்ட தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான வீரர், வீராங்கனைகளை உருவாக்குதல் எனும் நோக்கத்துடன் 1989 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த விளையாட்டுப் பாடசாலைகளின் நடவடிக்கைகள் முழுமையான செயற்பாட்டு நிலையில் இல்லை எனவும், 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான விளையாட்டு மாணவர்களை அனுமதிப்பதாற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் | தற்போது இயங்கும் விளையாட்டுப் பாடசாலைகளுக்கு 2024, 2025 ஆம் ஆண்டுகளில் அந்தந்தப் பாடசாலைகள் ஊடாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பரிசோதனைக்கு உட்படுத்திச் சமர்ப்பிக்கப்பட்ட மாணவர்/மாணவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 05 மாகாணங்களில் உள்ள விளையாட்டுப் பாடசாலைகளை மேம்படுத்துவது தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய, அந்தந்த விளையாட்டுப் பாடசாலைகளில் அடையாளம் காணப்பட்ட பௌதீக வசதிகளை மேம்படுத்துவதற்காக 200 மில்லியன் ரூபாய் மாவட்டச் செயலாளர்கள் ஊடாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது<br>• யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி<br>• ஹங்வெல்ல இராஜசிங்க வித்தியாலயம்<br>• அனுராதபுரம் மத்திய கல்லூரி |

| | | |
|---|---|---|
| | குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. | • அக்குரம்பட வீர கெப்பெட்டிப்பொல மகா வித்தியாலயம்<br>• வலல மத்திய கல்லூரி<br>• ஆணமடுva மத்திய கல்லூரி<br><br>விளையாட்டுப் புலமைப்பரிசில் கொடுப்பனவை 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து ஒரு மாணவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 10,000/- வீதம் வழங்குவதற்கும், அந்தக் கொடுப்பனவுகள் பாடசாலைகளுக்கு விரைவாகக் கிடைப்பதைத் நோக்கமாகக் கொண்டும் விளையாட்டுப் பாடசாலைக்குரிய வலயக் கல்வி அலுவலகத்திற்கு இரண்டாம் காலாண்டில் அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன |
| 11 | <u>மாணவப் படையணி மற்றும் சாரணர் இயக்கத்தை விஸ்தரித்தல்</u> | பாதுகாப்பு அமைச்சு மற்றும் சாரணர் சங்கம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி மாணவப் படை மற்றும் சாரணர் இயக்கத்தை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு தெரிவித்தது<br><br>1. மாணவப் படையணிக்கு பிள்ளைகளை ஈர்ப்பதற்கு தொடர்பாக அதிபர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன, மேலும், எதிர்காலத்திலும் அவற்றைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது<br><br>2. சாரணர் இயக்கத்தை விஸ்தரிப்பதற்காகச் சாரணர் சங்கத்தின் தலைமையில் தேசிய மட்டத்தில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| 12 | <u>விளையாட்டுச் சபையின் செயற்பாடுகள் செயலிழந்திருத்தல்</u><br><br>பாடசாலை மட்டத்தில் விளையாட்டு மேம்பாட்டை கண்காணித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் பாடசாலை விளையாட்டுக் கழகங்களைப் பதிவு செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்டிருந்த விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடு தற்போது செயலிழந்திருப்பதன் காரணமாக, பாடசாலை விளையாட்டுக் கழகங்களின் நிதி நடவடிக்கைகள் முறையாகக் கட்டுப்படுத்தப்படாமலும் கண்காணிக்கப்படாமலும் இருத்தல். | • பாடசாலை விளையாட்டுக் கழகம் மற்றும் பாடசாலை விளையாட்டுக் சங்கங்களைப் இற்றைப்படுத்துவதற்காக 05/2020 சுற்றுநிருபம் மீண்டும் திருத்தப்பட்டு 03/2021 சுற்றுநிருபம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, 2024 ஆம் ஆண்டில் அனைத்துப் பாடசாலை விளையாட்டு அதிகாரிகளுக்கான தேர்தல்களை நடாத்தி புதிய அதிகாரிகளை நியமித்தல், நியமிக்கப்பட்ட புதிய அதிகாரிகளுக்கு இயலளவு விருத்திப் பயிற்சிக் செயலமர்வு நடாத்துதல்<br>• அந்தந்தப் பாடசாலை விளையாட்டுக் சங்கங்கள் வருடாந்தம் பொதுச் சபைக் கூட்டங்களை நடாத்தி வருடாந்தம் நிதிக் கணக்காய்வினை மேற்கொள்ளுதல்<br>• அறிவுறுத்தல்களின்படி பாடசாலை விளையாட்டுக் சங்கங்கள் வருடாந்தம் உள்நாட்டு வெளிநாட்டுப் போட்டிகளை ஒழுங்கமைத்து நடாத்துதல் மற்றும் அவற்றில் பங்குபற்றுதல் என்பவற்றை மேற்கொள்ளுதல். |
| 13 | <u>பாடசாலை மாணவர்கள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதைக் கண்காணிப்பதற்காக அமைச்சில் காணப்படும் செயல்முறை</u> | தேசியச் சங்கங்கள், பாடசாலை விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு ஆகியவற்றின் ஊடாகவும், அதேபோல் பாடசாலைகளுக்கு நேரடியாகக் கிடைக்கும் அழைப்புகளைக் கருத்தில் கொண்டும் சர்வதேச மற்றும் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளுக்காக அங்கீகாரம் வழங்கும் நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுகின்றன. இதன்போது, அங்கீகரிக்கப்பட்ட சர்வதேசப் போட்டிகளுக்காகவும், அத்துடன் மேலே கோரிக்கை விடுக்கப்படும் நிறுவனங்களின் ஊடாகப் பிள்ளைகள் வெளிநாட்டு அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதற்கும் அங்கீகாரம் வழங்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது |
| 14 | <u>கொரிய EXIM வங்கிக் கடனின் கீழ் 03 தகவல் தொழில்நுட்ப மையங்களை நிறுவுதல்</u><br><br>இந்த செயற்றிட்டம் தொடர்பான தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்துக் குழுவினால் வினவப்பட்டது | அப/18/1142/835/005 இற்கான அமைச்சரவை அனுமதியின் மூலமாகவும், அப/19/3468/219/016 இலக்க அனுமதியின் மூலமாகவும் பிரதான மத்திய நிலையமாக ஹோமாகமப் பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 484, வடக்கு பிட்டிபன கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மாஹேனவத்த காணியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், முறையே அப/21/1324/308/113 மற்றும் அப./21/1655/308/113-1 ஆகியவற்றின் மூலமாகத் தென் மாகாணத் தகவல் தொழில்நுட்ப மத்திய நிலையம் தென் மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலையான காலி, பனாகமுவ அமரசிங்க பாடசாலை வளாகத்தில் அமைப்பதற்கும், கிழக்கு மாகாண மத்திய நிலையம் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தில் அத்துளுவாவ வீதியில் அடிப்படை வரைபடம் இலக்கம் 528 இலுள்ள காணித் துண்டு இலக்கம் 1 இனைப் பயன்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>2019 நவம்பர் 05 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட இயலுமை ஆய்வு அறிக்கையின் திருத்தப்பட்ட இயலுமை ஆய்வு அறிக்கை, கடனுடன்படிக்கைத் திருத்தத்திற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு கல்வி அமைச்சினால் 2022-12-15 ஆம் திகதியன்று வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கொரிய EXIM வங்கிக் கடனுடன்படிக்கையைத் திருத்துவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2023 ஜனவரி மாதம் கொரிய EXIM வங்கிக்கு அந்த இயலுமை ஆய்வு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. |
| | | National ICT Hub திட்டத்துடன் தொடர்புடைய கடனுடன்படிக்கைத் திருத்தம் கொரிய EXIM வங்கியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பணி என்பதாலும், இலங்கை அரசாங்கத்தின் கடன் கொள்கை நடைமுறை காரணமாகவும் இந்த கடனுடன்படிக்கைத் திருத்தம் தாமதமடைந்தது கொரிய EXIM வங்கியின் தரப்பால் நிகழ்ந்ததால், அவ்வப்போது இது குறித்து நினைவூட்டல் மட்டுமே அனுப்பப்பட்டது.<br><br>சம்பந்தப்பட்ட திருத்தப்பட்ட கடனுடன்படிக்கை 2024.09.18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் ஆலோசனைக் பெறுகைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், 2024 நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசாங்கத்தின் புதிய கொள்கைகளுடன் இணங்கிச் செயற்படும் வகையில், திட்டத்தைத் திருத்துவதற்காகப் பாரியளவிலான திட்டங்களை மீளாய்வு செய்வதன் கீழ் இந்தப் பணியும் |

| | | |
|---|---|---|
| | | மீளாய்வு செய்ய ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, 2025 ஜனவரி 03 ஆம் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின்போது இலங்கை அரசாங்கத்தின் பிரதமர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்விச் செயலாளர் ஆகியோரால் அறிவிக்கப்பட்டதன்படி இந்தப் பணியை மீளாய்வு செய்யத் தீர்மானிக்கப்பட்டது<br><br>மீளாய்வுக் காலப்பகுதியில் செயற்றிட்டத்துடன் தொடர்புடைய பெறுகைச் செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவை அமைப்பதற்குத் தொடர்புடைய ஆரம்பிக்கப்பட்டிருந்த பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. சம்பந்தப்பட்ட செயற்றிட்ட மீளாய்வுக் குழுவினால் குழு அறிக்கை வழங்கப்பட்டதன் பின்னர், செயற்றிட்டத்தை அப்படியே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்விச் செயலாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கடனுடன்படிக்கைக்கு அமைய ஆலோசனையளிக்கும் நிறுவனமொன்றை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பெறுகை நடைமுறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. அதன்படி, 2025 ஜூலை மாதம் முதல் பெறுகைச் செயல்முறை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக் கட்டமாக முதல் 6 மாதங்களுக்குள் ஆலோசனையளிக்கும் சேவைகளின் பெறுகைச் செயற்பாடுகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| 15 | <u>பத்தல கெதர விஞ்ஞான உபகரணக் களஞ்சியத்தில் இடம்பெற்ற முறைகேடு</u><br><br>பத்தல கெதர விஞ்ஞான உபகரணக் களஞ்சியத்தில் ரூபா 12.9 மில்லியன் முறைகேடு இடம்பெற்றது தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலை | i. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையின் விசாரணை அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை பரிந்துரைகள் ஒழுக்காற்றுப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பரிந்துரைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளன<br><br>ii. *நி.பி 104* இழப்புக்கள் மற்றும் நஷ்டங்கள் விசாரணைச் செயற்பாடுகளுக்காக 2025.10.09.ம் திகதியன்று தனி நபர் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது |
| 16 | <u>உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் நிலுவைகள் அதிகளவில் காணப்படல்</u><br><br>கணக்கிணக்க அறிக்கைகளுக்கமைய இடமாற்றம் பெற்று வந்த, இடமாற்றம் பெற்றுச் சென்ற, இறந்த, ஓய்வு பெற்ற, இடைநிறுத்தப்பட்ட, சேவையை விட்டு விலகிய, சேவையில் இருந்து விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் முடிவில் அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூ. 198,883,895/- ஆக இருந்தது. இதில் 05 வருடங்களை தாண்டிய நிலுவை ரூ. 75,155,836/- | இணைப்பு 02 |

| | | |
|---|---|---|
| | ஆக இருந்ததுடன், அந்த நிலுவைகளைச் சீராக்கவோ அல்லது அறவிடவோ நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | |
| 17 | <u>தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கையை 1000 ஆக மேம்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பான சிக்கல்கள்</u><br><br>இந்த வேலைத்திட்டத்திற்காக சுமார் ரூ. 2285 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், இதுவரை 22 பாடசாலைகள் மட்டுமே தேசியப் பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.. | குழுவொன்றை நியமித்து விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது ( இணைப்பு 03) |
| 18 | கல்வி அமைச்சுக்கு வெளிநாட்டு உதவிகளாகக் கிடைத்த செயற்றிட்டங்களின் பௌதீக முன்னேற்றம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படல் | இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் புசல்லாவ சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்தில் கட்டட நிர்மாணப் பணிகள் 2019 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்தன. இந்தப் பாடசாலைக்கான கணினி உபகரணங்கள் மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூ. 6,658,405/-க்கான ஏற்பாடுகள் தொடர்பான பெறுகைச் செயற்பாடுகள் கணக்காய்வு செய்யப்பட்ட தினமான 2023 மார்ச் 20 ஆம் திகதி வரையிலும் நிறைவடையவில்லை. அதன்படி, 2019 இல் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்து 04 வருடங்கள் கடந்த பின்னரும் இந்தப் பணிக்குரிய உபகரணக் பெறுகைச் செயற்பாடுகளை நிறைவு செய்ய முகாமைத்துவம் தவறி இருந்தது. விவசாய உபகரணங்கள் (Agriculture equipment), இலத்திரனியல் உபகரணங்கள் (Electronics), சமையலறை உபகரணங்கள் (Kitchen utensil), தளபாடங்கள் (Furniture) மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் (IT equipment) வழங்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள் (Science Lab equipment) வழங்குவது தொடர்பான பெறுகைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குரிய ஆவணங்களுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| 19 | ஆசிரியர் சேவை, ஆசிரியர் ஆலோசகர் சேவை, ஆசிரியர் கல்வியியலாளர் சேவை, கல்வி நிர்வாக சேவை ஆகிய 4 சேவைகள் தொடர்பாகவும், அத்துடன் பிரிவெனா கல்வி தொடர்பாகவும் காணப்படும் சிக்கல்கள்<br><br>1. ஒவ்வொரு சேவைக்கும், தரங்களுக்கும் இடையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள் காணப்படல்.<br><br>2. பணிக்குழுவில் வெற்றிடங்கள் காணப்படல்<br><br>3. ஆசிரிய பதவி உயர்வுகளை வழங்குவதில் தாமதம் ஏற்படல் | <u>பிரிவெனா கல்வி</u><br><br>• பிரிவெனா ஆசிரியர்களுக்கு நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த பதவிகளை உருவாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டு, நிறைவேற்று சேவை வகுதியைச் சேர்ந்த 33 பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/CM/08/Piriven இலக்க மற்றும் 2024.02.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>• அந்தப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றைத் தயாரித்து, எனது ED/ST/BUD/03/01/46 இலக்க மற்றும் 2024.08.06 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. அதன்படி, சம்பந்தப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்கி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரிடம் அனுப்புவதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது<br><br>• முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/SM 14/Vol.II இலக்க மற்றும் 2023.03.30 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் தற்போது 7591 பிரிவெனா ஆசிரியர் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஆசிரியர் ஆலோசகர் பதவிகளை உருவாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை<br><br>• நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாகக் கோவைகள் சார் பணிகளை நிறுத்தி வைக்குமாறு முன்னாள் கல்வி அமைச்சரிடமிருந்து ஆலோசனை கிடைத்துள்ளது<br><br>• பிரிவெனா பயிற்சிக் கல்லூரிகளில் உள்ள விரிவுரையாளர் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், பிரிவெனாப் பிரிவுக்குரிய பதவிகளை ஒவ்வொன்றாக அனுமதிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கலந்துரையாடல்களில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, இதுவரை விரிவுரையாளர் பதவிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரிக்கவில்லை. பதவிகள் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்படும்.<br><br>• அமைச்சரவை அனுமதியின் படி, பதவியை வகிப்பவருக்குத் தனிப்பட்டதாக நிறுவப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான நிறைவேற்றுச் சேவை வகுதிக்குரிய பதவி உயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது. அந்த உதவிப் |

பணிப்பாளர்களைச் சம்பந்தப்பட்ட தரத்தில் உள்வாங்குவதற்காக நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெற்றுக் கொள்வதாற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன

- பிரிவெனா ஆசிரியர்களின் சம்பளத்தில் மேலதிகமாக 6% அறவிடும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக, விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தையே பின்பற்றுவதற்கு கொள்கைத் தீர்மானம் எடுப்பதற்காக அமைச்சரவைச் விஞ்ஞாபனம் ஒன்று அனுப்பப்பட்டது. அதன்படி, எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பிரிவெனா ஆசிரியர்களையும் உள்ளடக்க அமைச்சரவைக்கு பரிந்துரை செய்யப்படும் என 2024.09.10 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது

- பிரிவெனா அபிவிருத்தி நிதியைச் சேகரிப்பதற்கான கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காகக் திறைசேரியில் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கும் உதவிகள் மற்றும் மானியங்களைக் கணக்கில் சேகரிப்பதற்காகக் திறைசேரியின் அனுமதியுடன் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்தக் கணக்கிலிருந்து நிதியைச் செலவிடுவதற்கான தேவையான சட்ட ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்காக, பிரிவெனா அபிவிருத்தி நிதியத்தை, பிரிவெனா சட்டத்தில் உள்ளடக்கத் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- பிரிவெனாக்களுக்குக் கல்விசாரா ஊழியர்களை வழங்குவதற்காகப் பல் செயற்பாட்டுத் திணைக்களத்தின் கீழ் பயிற்றுவிக்கப்பட்ட பயிலுனர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு, 395 செயற்பாட்டு உதவியாளர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, அவசியமான பிரிவெனாக்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களிடம் இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

**<u>ஆசிரியர் ஆலோசகர் சேவை</u>**

- **ஆசிரியர் ஆலோசகர் சேவைக்குள் உள்வாங்கப்படுவதற்கு இணக்கம் தெரிவித்தவர்கள் தற்போது உள்வாங்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது**

  இல. 2182/36 மற்றும் 2020.07.01 ஆம் திகதியிடப்பட்ட ஆசிரியர் ஆலோசகர் சேவை பிரமாணக் குறிப்பிற்கமைய ஆசிரியர் ஆலோசகர் சேவையில் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 4,471 ஆக உள்ளதுடன், அதற்காக உள்வாங்கப்பட விரும்பிய ஆசிரியர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு உள்வாங்குவதற்காக *2021.12.31* ஆம் திகதி வரை ஒரு வருட கால அவகாசம் வழங்கப்பட்டு, அதற்கமைய விருப்பம் தெரிவித்த

உத்தியோகத்தர்கள் *2022.01.02* ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் ஆசிரியர் ஆலோசகர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டு, அந்த உள்வாங்கல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், ஆசிரியர் ஆலோசகர் சேவையில் மேலும் காணப்படும் வெற்றிடங்களுக்காக சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின் பேரில் புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் அனுமதி பெறக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், அதன் போது ஆட்சேர்ப்பு தொடர்பான பரீட்சைக்கான ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, குறித்த திருத்தங்களுக்கான அனுமதி அரசாங்க சேவைகள், அந்தத் திருத்தங்களை அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதன் மூலம் ஆசிரியர் ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தி, அதற்கமைய புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன ஆணைக்குழுவிடம் இருந்து *2025.07.29* ஆம் திகதியிடப்பட்டுப் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அந்தத் திருத்தங்களை அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடுவதன் மூலம் ஆசிரியர் ஆலோசகர் சேவை பிரமாணக் குறிப்பினைத் திருத்தி, அதற்கமைய புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **பல்வேறு சேவைகளுக்கிடையே சம்பள முரண்பாடுகள் காணப்படுவது இங்கு எதிர்கொள்ளப்படும் பிரதான பிரச்சினை என்பதாக**

  பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 10/2025 இற்கமைய ஆசிரியர் ஆலோசகர் சேவையின் இறுதிச் சம்பள அதிகரிப்பின் பெறுமதி ஆசிரியர் சேவை மற்றும் அதிபர் சேவையின் பெறுமதிகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவு குறைவான பெறுமதியில் வைக்கப்பட்டுள்ளதால், அது சம்பந்தமாக தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் அறிக்கையிட்டு அந்த முரண்பாட்டினைச் சீர் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<u>ஆசிரியர் சேவை</u>**

ஆசிரியர் சேவையில் அடையாளம் காணப்பட்ட வெற்றிடங்கள் சுமார் 32,000 காணப்படுவதாக

2025.05.31 ஆம் திகதியன்று அனைத்து தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளிலுமுள்ள ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை அந்த 32,000 ஐ விட அதிகரித்துள்ளதுடன், அது தொடர்பான தகவல்கள் பின்வருமாறு உள்ளன

| தேசியப் பாடசாலைகள்/ தேசியப் பாடசாலைகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தேசியப் | 4484 |

| | | |
|---|---|---|
| பாடசாலைகள் | | |
| மாகாணப் பாடசாலைகள் | மேல் | 4630 |
| | தென் | 2513 |
| | மத்திய | 6318 |
| | வடமேல் | 2990 |
| | ஊவா | 2780 |
| | வட மத்திய | 1568 |
| | கிழக்கு | 6613 |
| | சபகரமுவ | 3994 |
| | வடக்கு | 3271 |
| மொத்தம் | | 36178 |

a) நாட்டில் மற்றும் மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக அரச சேவையில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான இல. 2317 மற்றும் 2023.01.27 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட போதிலும், அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் காரணமாக இடைக்காலத் தடை உத்தரவின் பேரில் *2023.03.25* ஆம் திகதி நடாத்தப்படவிருந்த பரீட்சை நடாத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால், இதுவரை அந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதுடன், ஏனைய பட்டதாரி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கும் அதனால் தடை ஏற்பட்டுள்ளது. அதற்கமைய, அந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களின் அளவைத் தற்காலிகமாகத் தடுத்து வைக்க நேரிடுவதுடன், அதற்கு மேலதிகமாகத் தொடர்ந்து காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பிரதமர் செயலாளரின் தலைமையில் நிறுவப்பட்டுள்ள அரச சேவையில் ஆட்சேர்ப்புக்கள் தொடர்பான மீளாய்வுக் குழுவிடம் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

b) மேலும், நாட்டில் உள்ள பெருந்தோட்டப்பகுதியை சார்ந்த தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக ஆசிரியர் உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பான இல. 2389 மற்றும் 2024.06.14 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன், அதற்கமைய 2024.08.12 ஆம் திகதி நடாத்தப்படவிருந்த ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்காக மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கிலக்கம் CA (Writ) 519/2024 இன் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் காரணமாக கௌரவ நீதிமன்றத்தினால் 2024.08.09 ஆம் திகதி குறித்த போட்டிப் பரீட்சை நடாத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்த வழக்கு நிறைவடைந்த பின்னர் அந்த ஆட்சேர்ப்பு

சம்பந்தமாகவும் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

<u>**கல்வி நிர்வாக சேவை**</u>

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களது நிலைப்படுத்தல்கள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பாக 2022.12.14 ஆம் திகதியிடப்பட்ட இல. 2310/29 இற்கமைவான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரச சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகள் 1 ஆம் பிரிவின் XVIII ஆம் அத்தியாயத்தின் 244 முதல் 287 வரையிலான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய மற்றும் *2021.10.04* ஆம் திகதியிடப்பட்ட இல. *2248/10* இற்கமைவான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான ஏற்பாடுகளின் படி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றங்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகிறது *(இணைப்பு 01 மற்றும் 02).*

அத்துடன், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் வருடாந்த இடமாற்ற நடைமுறைக்கு ( தரம் I, II, III) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய 2022 ஆம் ஆண்டு முதல் அந்த நடைமுறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. கல்வி அமைச்சின் சுற்றுநிருப இல.:- 32/2022 மற்றும் 2022.09.07 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட இடமாற்ற நடைமுறையின் பிரதியொன்று இணைப்பு 03 ஆக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் உள்ள 396 தேசியப் பாடசாலைகளில், அதிபர்கள் நியமனங்கள் கல்விச் சேவை தாபனக் கிளையினால் மேற்கொள்ளப்படுவதுடன், அங்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் *I* உத்தியோகத்தர்கள் அதிபர் பதவி வகிக்க வேண்டிய தேசியப் பாடசாலைகள், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் *II/III* உத்தியோகத்தர்கள் அதிபர் பதவி வகிக்க வேண்டிய தேசியப் பாடசாலைகள் மற்றும் இலங்கை அதிபர் சேவையின் தரம் *I* உத்தியோகத்தர்கள் அதிபர் பதவி வகிக்க வேண்டிய தேசியப் பாடசாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. வருடாந்தம் இந்த வகுதிகளின் கீழ் வெற்றிடங்கள் காணப்படும் தேசியப் பாடசாலைகளுக்காகத் தகுதியான உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் அனுமதிக்கமைய பொருத்தமான உத்தியோகத்தர்கள் அதிபர் பதவிக்காக நியமிக்கப்படுகின்றனர். அத்துடன், அவ்வாறு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் குறைந்தபட்சம் *03* வருட காலத்திற்குத் தமக்குக் கிடைக்கும் பாடசாலையின் அதிபர் பதவியை வகிக்க வேண்டும் எனவும் அந்த நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

மேலும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடன், கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல.:- 32/2022 மற்றும் 2022.09.07 ஆம் திகதியிடப்பட்டு

| | | |
|---|---|---|
| | | வெளியிடப்பட்ட இடமாற்ற நடைமுறையின் 2.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய நேர்முகப் பரீட்சைக் குழுவொன்றின் பரிந்துரையின் பேரில் நியமிக்கப்படும் அதிபர் பதவிக்குரிய இடமாற்றங்கள் அந்தப் பதவிக்காக நிரந்தரமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடையே மட்டுமே மேற்கொள்ளப்படும் எனவும், மேற்கூறிய பதவிகளுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுதல் அல்லது வேறு காரணங்களால் அந்தப் பதவிகளில் ஏற்படும் வெற்றிடங்களுக்காக இடமாற்ற நடைமுறைக்கு அமைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் எனவும், குறிப்பிடப்படுகின்றது<br><br>அதற்கமைய, வருடாந்த இடமாற்ற நடைமுறைக்கு அமைய 06 வருடங்களுக்கு மேல் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றிய அதிபர்களுக்கு இடமாற்றங்களை வழங்குவதற்கு வாய்ப்புள்ளதாக மேலதிகமாக அறிவிக்கின்றேன்.<br><br>இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கு நிலவும் சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் வரை அந்தச் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு 12 சம்பள அதிகரிப்புகளை வழங்குவதற்காக இல.: ED/SER/23/70 மற்றும் 2023.07.07 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைச் சுற்றுநிருபம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அமைச்சரவைச் செயலாளரின் இல.: *அப/23/1297/607/104* மற்றும் *2023.08.01* ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நாட்டில் நிலவும் பாதகமான பொருளாதார நிலைமை காரணமாக அரச நிதி வசதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இல. *03/2016 (IV)* மற்றும் *2022.01.05* ஆம் திகதியிடப்பட்ட அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் காரணமாக ஏற்பட்டுள்ள அனைத்துச் சம்பள முரண்பாடுகள் தொடர்பாகவும் விரிவான ஆய்வையும் முறையான மீளாய்வையும் மேற்கொண்ட பின்னர் எதிர்காலத்தில் முழு அரச சேவையின் சம்பள அமைப்பும் திருத்தப்படும் சந்தர்ப்பத்தில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட முன்மொழிவு குறித்து பரிசீலிப்பது பொருத்தமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது |
| | | அதன் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சேவை அனுபவம் அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களது சம்பள முரண்பாடுகளை நீக்குதல் எனும் தலைப்பின் கீழ் இல.: ED/SER/23/108 மற்றும் 2023.10.12 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைச் சுற்றுநிருபம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்காக ஆசிரியர் ஆலோசகர் சேவையின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல் எனும் தலைப்பின் கீழ் அமைச்சரவைச் செயலாளரினால் அனுப்பப்பட்ட இல.: அப/23/1882/607/002 – II மற்றும் 2023.11.28 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், *2022.01.01* ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தம் காரணமாக ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாடுகள் மற்றும் அது தொடர்பான ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பொருத்தமான முன்மொழிவுகளை, |

கவனத்திற் கொள்வதற்காகத் தமது அமைச்சர் மூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடுவதற்கு தாபன விவகாரங்கள் தொடர்பான அமைச்சரவை உப குழுவினால் செய்யப்பட்ட பரிந்துரையை அமைச்சரவை அனுமதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

அதற்கமைய, சம்பள முரண்பாடு பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக 2024.03.21 ஆம் திகதி தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றதுடன், குறித்த சம்பள முரண்பாடு ஏற்பட்டுள்ள விதம் குறித்து விரிவாகச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் *2024.06.24* ஆம் திகதியிடப்பட்ட மற்றும் *2025.04.07* ஆம் திகதியிடப்பட்ட கடிதங்கள் மூலம் தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கடிதங்களுக்கான பதிலாக, *2022.01.05* ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. *03/2016 (IV)* வெளியிடப்பட்டதன் மூலம், அந்தச் சுற்றறிக்கை அமுலாகும் சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு இடையிலும் அதேபோல கல்வித் துறையின் ஏனைய சேவைகளுக்கிடையிலும் சம்பள முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும், இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பது *2022.01.05* ஆம் திகதியிடப்பட்ட பொது நிர்வாகச் சுற்றறிக்கை *03/2016 (IV)* இனால் ஏற்பட்ட அனைத்துச் சம்பள முரண்பாடுகள்/ பொருத்தமற்ற நிலைமைகள் தொடர்பாக விரிவான ஆய்வின் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அந்தப் பிரச்சினை தொடர்பாகவும் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இல.: *EST-5/07/CBN/0001(i)* மற்றும் *2025.08.03* ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தாபனப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் III இற்கான சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் காணப்பட்ட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 67 ஆகும். அவற்றில் *2024.07.01* ஆம் திகதி *60* உத்தியோகத்தர்களும், *2025.03.03* ஆம் திகதி *4* உத்தியோகத்தர்களும், தற்போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். மீதியாக உள்ள *3* வெற்றிடங்கள் எதிர்காலத்தில் நிரப்பப்படவுள்ளன. இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் *III* இற்கு திறந்த அடிப்படையின் கீழ் காணப்பட்ட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை *113* ஆகும், *2025.07.01* ஆம் திகதி நியமனங்களைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை *88* ஆகும் என்பதால் எழுத்துப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து மேலும் *25* பட்டதாரிகளை எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் *III* இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் காணப்பட்ட மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை *442* ஆகும், அவற்றில் *405* உத்தியோகத்தர்களுக்கு *2025.09.01* ஆம் திகதி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் மீதியான *37* வெற்றிடங்களுக்காக எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புச் செய்ய எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆசிரியர் கல்வியியலாளர் சேவை**

| | | |
|---|---|---|
| | | ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புகளின்போது ஆசிரியர் சேவையில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சம்பள மாற்றங்கள் காரணமாக இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு பதவி உயர்வு பெறும் உத்தியோகத்தர்களிடயே சம்பள முரண்பாடுகள் காணப்படுவதுடன், அது தொடர்பாக கொள்கை ரீதியான முடிவொன்று எடுக்கப்பட வேண்டும் என அவதானிக்கின்றேன்<br><br>2020.02.07 ஆம் திகதிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்ட உத்தியோகத்தர்களில் இருந்து மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் 2025.06.02 ம் திகதிக்கு இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு 591 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், திறந்த அடிப்படையில் 384 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எழுத்துப் பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆரம்ப நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு அதன் பரிந்துரைகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவிற்குச் |
| | | சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அந்த ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்த பின்னர் கட்டமைப்பு ரீதியான மற்றும் செயன்முறைப் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன. அந்தக் கட்டங்கள் நிறைவடைந்த பின்னர் எதிர்காலத்தில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். அதற்கமைய தற்போது பணிக்குழுவினர் வெற்றிடங்கள் குறைவடைந்துள்ளன.<br><br>ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரங்களுக்கான பதவி உயர்வுகள் தற்போது தாமதமின்றி முறையாக மேற்கொள்ளப்படுகின்றன. அந்த உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி நிலையங்களுக்குத் தேவையான உத்தியோகத்தர்கள் ஏற்கனவே நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், , ஆசிரியர் நிலைய முகாமையாளர்களை நியமிப்பது தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவிடம் வினவப்பட்டுள்ளது. பீடாதிபதி, உப பீடாதிபதி, ஆசிரியர் கலாசாலை அதிபர் ஆகிய பதவிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாகப் பதவிகளுக்கு நியமனம் வழங்கும் நேர்முகப் பரீட்சைக்குரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக தற்போது பிரதான ஆணையாளரிடம் வெற்றிடங்களின் விபரங்கள் கோரப்பட்டுள்ளன. |

**<u>பிரான்ஸின் பரிஸ் நகரத்தில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தரது பதவியை இரத்துச் செய்தமைக்காக நஷ்ட ஈடு செலுத்துதல்</u>**

பிரான்சில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் பதவியை உருவாக்குதல்.

*01.* *2006.08..10*ம் திகதியுடையதாக கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் அப*/06/1486/229/087* தொடர்பில் *2006* ஒக்டோபர் மாதம் *04*ம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் பதவியை உருவாக்குவதற்காக விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வேதனங்களை செலுத்துவதன் அடிப்படையில் பதவிக்கு நியமிப்பதற்கு பிரான்சில் இருக்கும் இலங்கைத் <u>தூதுவருக்கு அனுமதி வழங்குவதற்கான அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு *1-A, 1-B*)</u>

மேலும், *2006/09/13*ம் திகதியுடையதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அவதானிப்பின் பிரகாரம் மேற்படி பதவியை உருவாக்குவது அவசியம் எனின், அதற்கான கோரிக்கையினை அனுமதி பெற்றுக் கொள்வதற்காக பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைப்பது பொருத்தம் என்பதாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது, *(*இணைப்பு *2)*

இருப்பினும், இவ் விடயம் தொடர்பில் எடுக்கப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்குரிய ஆவணங்கள் யுனெஸ்கோ கிளையில் இல்லை என்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

*02.* அத்துடன், இலங்கைக்கான யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் பதவிக்கான சம்பளம் மற்றும் பதவிப் பெயரை மாற்றுதல் எனும் தலைப்பில் கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட *2017-04-28*ம் திகதியுடைய இலக்கம் *17/0946/742/016* உடைய அமைச்சரனை முன்மொழிவினை பரிசீலனை செய்து, *2017-07-18*ம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் குறித்த பதவிப் பெயரை ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் என்பதாக திருத்தம் செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. *(*இணைப்பு *3-A, 3-B)*. மேலும், தேசிய சம்பளம் மற்றும் ஆளணியினர் ஆணைக்குழுவின் பரிந்துரையைப் பெற்று குறித்த பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டத்தை தீர்மானிக்குமாறும் ஆலோசனை வழங்கப்படுள்ளது. அதற்கமைய *2017/10/27*ம் திகதியுடைய கடிதம் மூலம் தேசிய சம்பளம் மற்றும் ஆளணியினர் ஆணைக்குழுவினால் அனைத்து கொடுப்பனவுகளும் சகிதம் *(2200* யூரோக்கள்*)* உடைய மாதாந்த சம்பளமொன்றை இலங்கை நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் பதவி வகிப்பவருக்கு செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. *(*இணைப்பு *4)*.

ஆனாலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016/04/27ம் திகதியுடைய கடிதம் மூலம் பிரான்சில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு அனுமதியளிக்க முடியாது என்பதாக அறியத் தரப்பட்டுள்ளது. (இணைப்பு 5)

03. இருப்பினும், பிரான்சில் அமைந்துள்ள யுனெஸ்கோ நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் யுனெஸ்கோ ஒருங்கிணைப்பாளர் பதவிக்கு 2006ம் ஆண்டில் திருமதி. திலும் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். இந்த உத்தியோகத்தரை நியமித்தல் மற்றும் அதற்கான சம்பளங்களை செலுத்துதல் தொடர்பில் 2020 பெப்ரவரி மாதம் 07ம் திகதியன்று தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் தகவல்கள் கோரப்பட்டுள்ளன. 2021.12.31ம் திகதியன்று சேவையின் பின்னர் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்துவதற்கு கல்விச் செயலாளர் நடவடிக்கையெடுத்துள்ளதுடன், அது தொடர்பில், இலக்கம் U/04/FIN/58 மற்றும் 2022.01.25ம் திகதியுடைய கடிதம் மூலம் பிரான்சின் பரிச் நகரத்தில் இருக்கும் தூதுவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மீண்டும் ஒரு தடவை 2020 செப்டெம்பர் மாதம் 07ம் திகதியன்று தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ளது. மீண்டும் 2022 பெப்ரவரி மாதம் 22ம் திகதியும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் இது தொடர்பில் தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக விசாரிக்கப்பட்டு வருவதுடன், பிரான்ஸின் பரிஸ் நகரத்தில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயத்தின் ஒருங்கிணைப்பாளர் பதவியில் கடமைகளை நிறைவேற்றி வந்த திருமதி திலும் குணவர்தன அவர்களால், அவரது சட்டத்தரணிகள் நிறுவனத்தினூடாக 2022-மே மாதம் 05ம் திகதியன்று அவரது பதவியை இடைநிறுத்தியமை தொடர்பில் அவருக்கு நஷ்ட ஈடு பெற்றுக் கொள்வதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதாக தூதுவரூடாக கல்விச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பில் சட்டரீதியாக செயற்படுவதற்காக கல்விச் செயலாளரின் ஆலோசனையின் படி அமைச்சின் சட்ட உத்தியோகத்தருக்கு தேவையான ஆவணங்கள் அடங்கிய கோவை கையளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் பரிஸ் நகரின் நிரந்தர பிரதிநிதி அலுவலகத்தின் சட்ட உத்தியோகத்தரின் வினவப்பட்டதுடன் 2022-09-15ம் திகதியுடையதாக உறுதிப்படுத்தப்படாத குறிப்பொன்றுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

04. யுனெஸ்கோ ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் திருமதி திலும் குணவர்தன அவர்கள் அவரது பதவியை இடைநிறுத்தியமை தொடர்பில் நஷ்ட ஈடு கோரி பிரான்ஸ் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு காரணமாக கல்வி அமைச்சரால் அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்றை சமர்ப்பித்து அதன் பின்னர் உரிய நஷ்ட ஈட்டுத் தொகை பிரான்ஸின் தூதுவராலயத்தினூடாக

**இணைப்பு 2**

| தொடர் இல. | விபரம் | கணக்குகளுக்கமைய 2022.12.31ம் திகதிக்கு 1 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவைகளின் அளவு | 2022.12.31ம் திகதிக்கு 1 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவைகளில் 2023.12.31ம் திகதிக்கு தீர்க்கப்பட்ட கடன் நிலுவைகளின் அளவு |
|---|---|---|---|
| 1. | அமைச்சு/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து (3.2) | **52,314,025.22** | **8,326,234.65** |
| 2. | மாகாண சபை நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து (3.3) | **20,103,777.55** | **4,117,052.93** |
| 3. | மரணித்த உத்தியோகத்தர்கள் (3.4) | **5,937,477.13** | **1,160,658.24** |

| | | | |
|---|---|---|---|
| 4. | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் (3.5) | **24,283,306.58** | **5,901,105.93** |
| 5. | வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் (3.6) | **3,554,421,.29** | **54,344.38** |
| 6. | சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் (3.7) | **9,129,933.78** | **1,008,107.00** |
| 7. | வேறு உத்தியோகத்தர்கள் (3.8) | **5,871,297.52** | **5,000.00** |
| | மொத்தம் | **121,194,239.07** | **20,572,503.13** |

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
"Isurupaya", ... Lanka.
+94112785141-50 | 94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

ඇමුණුම 01

**ඇමුණුම 03**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My Ref | ED/3/37/01/122/COPA | ඔබේ අංකය / உமது இல. / Your Ref | | දිනය / திகதி / Date | 2025.08. 27 |

ඒ.ජේ.එස්.එස්. එදිරිසූරිය මයා - අතිරේක ලේකම් (ආයතන)

සුජාතා කුලේන්ද්‍රකුමාර් මිය - අතිරේක ලේකම් (ප්‍රතිපත්ති, සැලසුම් හා කාර්යසාධන සමාලෝචන)

දේවිකා ලියනගේ මිය - අතිරේක ලේකම් (ප්‍රසම්පාදන)

ඒ.එස්.ඩී. අලුත්ගේ මිය - ප්‍රධාන මූල්‍ය නිලධාරී ।

කේ.ඒ.ජේ. ප්‍රිෂංගිකා මිය - අධ්‍යාපන අධ්‍යක්ෂ (ප්‍රතිපත්ති හා සැලසුම්)

**"පාසල් පද්ධතියේ දැනට ක්‍රියාත්මක වන පාසල් අතුරින් තෝරාගත් පාසල් ජාතික පාසල් ලෙස වැඩිදියුණු කිරීම තුළින් ජාතික පාසල් සංඛ්‍යාව 1000ක් දක්වා ඉහළ නැංවීම" පිළිබඳ විමර්ශන කිරීමේ කමිටුව**

2025.07.23 දින පාර්ලිමේන්තුවේ පැවති රාජ්‍ය ගිණුම් කාරක සභා (COPA) කමිටු රැස්වීමේ දී ඉහත ව්‍යාපෘතියට අදාළව සැලසුම් සකස් කිරීම, පාසල් තෝරා ගැනීම, එම පාසල්වලට මුදල් වැය කිරීම සම්බන්ධයෙන් විමර්ශනයක් කර එහි වාර්තාවක් මාස 3ක් ඇතුළත රාජ්‍ය ගිණුම් කාරක සභා (COPA) කමිටුවට ඉදිරිපත් කරන ලෙස දන්වන ලදී.

02. ඒ අනුව, ඉහත විමර්ශන කාර්යය සඳහා පිහිටුවන ලද පහත සඳහන් කමිටුවේ සාමාජිකයෙකු වශයෙන් ඔබ පත් කර ඇති බව කාරුණිකව දන්වමි.

1. සභාපති - ඒ.ජේ.එස්.එස්. එදිරිසූරිය මයා - අතිරේක ලේකම් (ආයතන)
2. සාමාජික - සුජාතා කුලේන්ද්‍රකුමාර් මිය - අතිරේක ලේකම් (ප්‍රතිපත්ති, සැලසුම් හා කාර්යසාධන සමාලෝචන)
3. සාමාජික - දේවිකා ලියනගේ මිය - අතිරේක ලේකම් (ප්‍රසම්පාදන)
4. සාමාජික - ඒ.එස්.ඩී. අලුත්ගේ මිය - ප්‍රධාන මූල්‍ය නිලධාරී ।
5. සාමාජික - කේ.ඒ.ජේ. ප්‍රිෂංගිකා මිය - අධ්‍යාපන අධ්‍යක්ෂ (ප්‍රතිපත්ති හා සැලසුම්)

03. මෙම විමර්ශනය සිදු කර 2025.10.03 දිනට පෙර වාර්තාවක් මා වෙත යොමු කරන ලෙස වැඩිදුරටත් දන්වමි.

04. තව ද, මෙම කාර්යය සාර්ථකව ඉටු කිරීම සඳහා ඔබ විසින් දක්වනු ලබන සහයෝගය හා සක්‍රිය දායකත්වය බෙහෙවින් අගය කරමි.

O/C නාලක කළුවැව
ලේකම්

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka
+94112785141-50 | 94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

(7)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව / எனது இல. / My Ref | ED/3/37/01/122/COPA | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref | | දිනය / திகதி / Date | 2025.09.02 |

ඒ.ජේ.එස්.එස්. එදිරිසූරිය මයා - අතිරේක ලේකම් (ආයතන)

සුජාතා කුලේන්ද්‍රකුමාර් මිය - අතිරේක ලේකම් (ප්‍රතිපත්ති, සැලසුම් හා කාර්යසාධන සමාලෝචන)

දේවිකා ලියනගේ මිය - අතිරේක ලේකම් (ප්‍රසම්පාදන)

ඒ.එස්.ඩී. අලුත්ගේ මිය - ප්‍රධාන මූල්‍ය නිලධාරී ।

කේ.ඒ.ජේ. ප්‍රිෂංගිකා මිය - අධ්‍යාපන අධ්‍යක්ෂ (ප්‍රතිපත්ති හා සැලසුම්)

**"පාසල් පද්ධතියේ දැනට ක්‍රියාත්මක වන පාසල් අතුරින් තෝරාගත් පාසල් ජාතික පාසල් ලෙස වැඩිදියුණු කිරීම තුළින් ජාතික පාසල් සංඛ්‍යාව 1000ක් දක්වා ඉහළ නැංවීම" පිළිබඳ විමර්ශන කිරීමේ කමිටුව**

උක්ත කරුණ සම්බන්ධයෙන් මාගේ සමාංක හා 2025.08.27 දිනැති ලිපිය හා බැඳේ.

02. ඒ අනුව රාජ්‍ය ගිණුම් කාරක සභාවේ උපදෙස් පරිදි උක්ත ලිපියේ සඳහන් ජාතික පාසල් සංඛ්‍යාව 1000ක් දක්වා ඉහළ නැංවීමේ වැඩසටහන පිළිබඳ සිදු කරන විමර්ශනයට අමතරව එවකට පැවති අධ්‍යාපන සේවා රාජ්‍ය අමාත්‍යාංශය විසින් ක්‍රියාත්මක කරන ලද, විගණකාධිපතිවරයා විසින් කරුණු විමසා ඇති මෙහි ඇමුණුම් 01 හි සඳහන් ව්‍යාපෘති 72ක සම්බන්ධයෙන් පූර්ණ විමර්ශනයක් සිදු කර මාස තුනක් ඇතුළත රාජ්‍ය ගිණුම් කාරක සභාවට වාර්තා කරන ලෙස දන්වා ඇත.

03. මෙම විමර්ශනය කඩිනමින් සිදු කර මා වෙත යොමු කරන ලෙස කාරුණිකව දන්වමි. තව ද, මෙම කාර්යය සාර්ථකව ඉටු කිරීම සඳහා ඔබ විසින් දක්වනු ලබන සහයෝගය හා සක්‍රීය දායකත්වය බෙහෙවින් අගය කරමි.

O/C

නාලක කළුවැව
ලේකම්

Ministry Of Education

Physical and Financial Progress of Development Pojects and Programmes as at 30th September 2025

| | Project | Location | Total Cost (Rs.Mn.) – Original | Total Cost (Rs.Mn.) – Current (if revised during implementation) | Project period From To (Month/ Year) – Original | Project period From To (Month/ Year) – Revised (if extended) | Funding Source | Financial Targets and Progress (Rs.Mn.) – Allocation 2025 | Financial targets and progress- 2025 ( as at 30.09.2025) – Expenditure target | Imprest Requested | Imprest Received | Actual Expenditure | Bills in hand | Cumulative expenditure (as at 30.09.2025) | Physical Targets and Progress – Overall physical target ( expected outputs) of the project (A) | Cumulative physical progress as at 30th September 2025 as % of (A) | Physical targets and progress -2025 – Targets – Descriptive target for 2025 | Cumulative quarterly targets (%) (B) – Q-1 | Q-2 | Q-3 | Q-4 | Progress (as at 30.09.2025) – Description | as % of (B) | Cum… Description |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q3-2024 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | Establishment of National College of Education and Teacher Training System for Technology Stream- (Construction only) | Kurunegala - Kuliyapitiya | 3,974.70 | 4,853.17 | 2017/01-2023/12 | 2022-2026 | GOSL/ KOICA | 2,496.00 | 2,176.02 | 907.65 | 857.19 | 813.03 | 44.16 | 3906.99 | 1. completion KOICA scope and completion of required utilities through MOE scope<br>2. completion male hostel and ocupying the student trainees | 75% | 1. completion of KOICA balance scope<br>2. completion of MOE scope<br>2. completion male hostel | 65% | 70% | 80% | 85% | **KOICA Scope**<br>The construction of Original KOICA scope has been completed. KOICA Balance scope (Stage II) work is ongoing<br>**MOE Scope**<br>01. Cafeteria Building has completed.<br>02. Fence work has completed<br>03. External service work is ongoing - (Road Carpet / Play Ground & landscaping) Progerss 99%<br>04. construction of male & female | 75% | 1. 98% comp ed<br>2. 9 comp ed<br>3. 85 comp ed |

pac@parliament.lk